9 செப்டம்பர் 1978]

இசுக்கழி கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கம்

*வினு எண். 101—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா——

(அ) திருவண்ணுமலை வட்டம், இசுக்கழி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் இருந்து அண்டம்பள்ளம் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய கடன் வசதிகள் அனைத்தும் முழுமையாகப் புறக்கணிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது குறித்து அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) கடன் வசதிகள் புறக்கணிக்கப்படுவதில்லை.

(ஆ) இது குறித்த வினு எழவில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கடன் புறக்கணிக்கப்படவில்லை என்று சொன்னுர்கள். இந்த இசுக்கழி கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்கள் இணைந்திருக்கின்றன. அந்த பத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குறிப்பிட்ட காலத்தில் விவசாயிகளுக்கான கடன்களை வழங்குவதில்லை என்பதை அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து கடன்களை உடனடியாக வழங்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அண்டம்பள்ளி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் கடந்த 1975-76ஆம் ஆண்டிலிருந்து கலைக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினுலே, அதுவும் போதுமான காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே அந்தச் சங்கத்திலே உள்ள விவசாய உறுப்பினர்களுக்கு, ஏறத்தாழ 1,251 விவசாயிகளுக்கு அந்த உரிமை மறுதளிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் அந்த விவசாயிகள் இசுக்கழி அருகிலேயே உள்ள விவசாயச் சங்கத்திலே போதுமான கடன் வசதி அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நகைக் கடன்கள்

*வினு எண். 102—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா——

(அ) கிராமப் பகுதியிலுள்ள விவசாய கூட்டுறவுக் கடனுதவி சங்கங்களும், கூட்டுறவு அர்பன் பாங்குகளும் நகைகள் மீது கடன் வழங்குவதில் கிராமுக்கு ரூபாய் 25/யை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை அதிகரிக்கப்படும் ?